Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU




போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி கார்த்திகை 24 ஆம் நாள் ஷஃபான் பிறை 4 (9 12-64) புதன்கிழமை இதழ் 300

பார்லிமெண்டைக் கலைக்க அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்காக

# நாளை வேலைநிறுத்தம்; எதிர்க்கட்சிகள் முடிவு

## மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தவும் தீர்மானம்!

கொழும்பு, செவ்வாய்

பார்லிமெண்டைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கு முகமாக ஒரு நாள் அடையாள பொது வேலை நிறுத்தம் செய்யுமாறு அரசாங்கத்துறையைச் சேர்ந்த ஊழியர்களையும் கார்ப்பரேஷன் ஊழியர்களையும் கேட்டுக்கொள்வதென்று எதிர்க் கட்சிகள் இன்று தீர்மானித்தன. இம் மாதம் 10-ம் திகதி வியாழக்கிழமை பொது வேலைநிறுத்தம் நடைபெறும்.

இன்று ஜனப்பிரதிநிதிகள் சபைக் கட்டிடத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அறையில் எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜே. வி. பி. தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தின, எம். ஈ. பி. தலைவர் திரு பிலிப் குணவர்த்தன, திரு ஜே ஆர். ஜயவர்த்தன, திரு ரொபர்ட் குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசாங்கம் தோல்வியடைந்தும், பார்லிமெண்டைக் கலைக்கப்போவதாகவும் பொதுத்தேர்தல் நடத்தப் போவதாகவும் பிரதமர் தெரிவித்தும் இதுவரை அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றும் எனவே பார்லிமெண்டைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கு முகமாக ஒரு நாள் அடையாள பொது வேலை நிறுத்தம் செய்யுமாறு சகல உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகியோரைக் கேட்டுக் கொள்வதென்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் தீர்மானித்தனர்.

அரசாங்க ஊழியர்களும் தனியார்துறை ஊழியர்களும், தொழிலாளர்களும், கார்ப்பரேஷன் ஊழியர்களும் எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று ஒருநாள் வேலை நிறுத்தம் செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் என்று சொல்வதைவிட ஒருநாள் ஹர்த்தால் என்று சொல்வதே பொருந்தும் என எதிர்க்கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர்களான திருவாளர்கள் டட்லி சேனநாயக்கா, ஜே ஆர் ஜெயவர்த்தன, எஸ் ஜே வி செல்வநாயகம், ஈ எம் வி நாகநாதன், கே எம் பி ராஜரத்தின, தகநாயக்கா, சி பி டி சில்வா, மகாநாமசமரவீர, ரொபேர்ட் குணவர்த்தன ஆகியோர் கைச்சாத்திட்டு வெளியிட்ட அறிக்கை வருமாறு:

பார்லிமெண்டை உடனடியாக கலைத்துப் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துமுகமாகக் கோரி, டிசம்பர் 10-ம் திகதி நாடுபூராவும் பொது வேலை

(2 ம் பக்கம் பார்க்க)

## பலாத்காரம் கூடாது!

### தேர்தல் விரைவில் நடைபெறும்

### பிரதமரின் 2-வது வானொலிச் செய்தி

கொழும்பு, செவ்வாய்

மக்கள் ஆத்திரமெதுவும் அடையாமல், பொறுமையுடன் இருக்கவேண்டுமென்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்றிரவு விடுத்த வானொலி செய்தியில் தெரிவித்துள்ளார்.

"கடந்த 3, 4 தினங்களாக நாட்டில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஒழுங்கற்ற நடவடிக்கைகளில் யாரும் இறங்குவார்களேயானால், நாட்டின் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்ட அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். கலகம் எதுவும் தலைகாட்ட நாம் அனுமதிக்க மாட்டோம்" என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சில எம். பி.க்களின் துரோக செயலினால் அரசாங்கம் வீழ்ச்சி அடைந்துவிட்டது. இருந்த பொழுதிலும் எங்களது இலட்சியத்தை நாங்கள் அடைந்தே தீருவோம். பெளத்தத்துக்கும், மகாசங்கத்துக்கும் இந்த அரசாங்கம் அதிக சேவையாற்றியுள்ளது. எந்த பிக்குவாவது மரியாதையின்றி நடந்தால், அவர்கள் மக்களின் மரியாதையை இழக்க நேரிடுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

பார்லிமெண்ட் கலைக்கப்படுமென்றும் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறுமென்றும் இன்று இரண்டாவது தடவையாகத் தமது வானொலிச் செய்தியில் கூறிய பிரதமர்; பார்லிமெண்ட் எப்பொழுது கலைக்கப்படுமென்றும், பொதுத் தேர்தல் எப்பொழுது நடைபெறுமென்றும் திகதியெதுவும் சொல்லவில்லை.

## அரசாங்க தொழிற்சங்கங்கள்

### வேலைநிறுத்தம் செய்யாது

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கச் சார்பான தொழிற்சங்கங்கள் முன்னர் உத்தேசித்திருந்தபடி வியாழக்கிழமை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளன. எதிர்க்கட்சிகள் சார்பான தொழிற்சங்கங்கள் வியாழக்கிழமையன்று வேலைநிறுத்தத்தில் இறங்க உத்தேசித்துள்ளதை தொடர்ந்தே இவ்விதம் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரயில், பஸ்சேவை தடைப்படாது

### மந்திரி அனில் அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

எதிர்க்கட்சியினர் எதிர்பார்ப்பதுபோல நாளை மறுதினம் 'வியாழக்கிழமை ரயில், பஸ் சேவைகள் எதுவும் தடைப்படாது என்று போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா இன்று விடுத்த செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

"ரயில், பஸ் சேவைகள் வியாழக்கிழமை பாதிக்கப்படுமென்று எதிர்க்கட்சியினர் வதந்திகளைப் பரப்புகின்றனர். ஆனால் இந்தச் சேவைகள் குறைக்கப்படவோ அல்லது தடைப்படவோ நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது" என்றும் திரு. அனில் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

## 'லேக்ஹவுஸ்' மசோதா வந்தே தீருமாம்

கொழும்பு, செவ்வாய்

பாராளுமன்றம் இம்மாதம் 17-ந் திகதி மீண்டும் கூடும் பொழுது, லேக்ஹவுஸ் பத்திரிகைகளை எடுக்கும் மசோதாவைச் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும், இம்மசோதா விவாதம் தொடர்ந்து நடைபெறுமென்றும் தெரிய வருகிறது.

இம்மசோதாவை பாராளுமன்றத்தில் நிறைவேற்றக்கூடிய பெரும்பான்மை இருப்பதாகவும், சமசமாஜக்கட்சி மந்திரிகளும், சில அரசாங்க கட்சி எம் பிக்களும் லேக்ஹவுஸ் பத்திரிகைகளை எடுக்கும் மசோதாவைக் கொண்டுவரும்படி பிரதமரிடம் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

லேக்ஹவுஸ் பத்திரிகைகளை எடுக்கும் மசோதா விவாதிக்கப்பட்டு வாக்களிக்கும் சமயம் நிதிமந்திரி டாக்டர் என் எம் பெரேரா இலங்கை வந்து சேர்ந்து, வாக்களிப்பில் கலந்து கொள்வாரென்றும் மேலும் தெரிய வருகிறது. லேக்ஹவுஸ் பத்திரிகைகளை எடுக்கும் மசோதாவும், பத்திரிகை சபை மசோதாவும் இம்மாதம் 9-ந் திகதி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருந்தது. திடீ

(5-ம் பக்கம் பார்க்க)

## என். எம். இன்று திரும்புகிறார்?

கொழும்பு, செவ்

நிதிமந்திரி டாக்டர் என் எம். பெரேரா நாளை புதன்கிழமை கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. கியூபா சென்றிருந்த திரு பெர்னட் சொய்ஸா சனிக்கிழமை இலங்கை திரும்புவார் என அறியப்படுகிறது.

பிளாஸா தேயிலை

பாவிப்பாளர்களுக்கு!

ரூபா 15,000

(283 பரிசுகள் காத்திருக்கின்றன)

[illegible] இன்றே முந்துங்கள். விபரங்களுக்கு உங்கள் வியாபாரிகளைக் கேளுங்கள்.

பிளாஸா தேயிலை விலையில் மலிவானது, தரத்திலும் குணத்திலும் உயர்வானது, தேயிலை தரம் உருசிபார்க்கும் நிபுணர்களால் பரிசோதித்து அடைக்கப்பட்டது.

இன்றே வாங்கிப் பருகி ஆனந்தமடையுங்கள்.

### மணிவாக்கு

யார் வேண்டுமானாலும் இறக்கட்டும். என் நிபந்தனை ஒன்றேதான். விருப்பு, வெறுப்பு, பெருமை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்று ஆன்ம தரிசனம் கிடைத்த பின்னர் இறக்கட்டும்.

— விநோபாஜி


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு கார்த்திகை மீ 24உ (9-12-64)


## தலைதூக்கும் பலாத்காரம்

வெலிமடைப் பிரதிநிதி திரு. கே. எம். பி. ராஜரத்னாவின் வீட்டின்மீது எறிகுண்டு வீசப்பட்டு வீட்டின் முன்புறம் சேதமடைந்துவிட்டதாகவும் திரு. ராஜரத்னா அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. கொள்கை வேறுபாடு என்ன இருப்பினும் அரசியல் காரணமாக நடைபெறும் பலாத்காரச் சம்பவங்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதுடன் இதுபோன்ற சம்பவங்கள் இனியும் நிகழாமல் தடுப்பதற்கு கண்டிப்பான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

திரு. சி. பி. டி' சில்வா கட்சிமாறி எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்ததன்மூலம் அரசாங்கம் ஒரு வாக்கினால் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பார்லிமெண்ட் கட்டிடத்தின் முன்பும் கொழும்பிலும் கோட்டேயிலும் நடந்த பொதுக்கூட்டங்களிலும் பலாத்காரச் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன. இச்சம்பவங்கள் பெரும் கலகமாகப் பரவவிடாது பொலிசார் தடுத்துள்ளனர். இதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும். 1956-ம் ஆண்டில் பார்லிமெண்ட் கட்டிடத்துக்கு முன்னுள் காலிமுக மைதானத்தில் தமிழரசுக்கட்சியினர் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்தபோது ஒரு கூட்டத்தினர் கற்களை வீசியும் சத்தியாக்கிரகிகளை அடித்தும் கடித்தும் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்ட சமயத்தில் அப்பொழுதே பொலிசார் உறுதியுடன் நடவடிக்கை எடுத்திருந்தால் கொழும்பிலும் கல்லோயாவிலும் வகுப்புக் கலகமும், கொள்ளை, கொலைபோன்ற சம்பவங்களும் நிகழ்ந்திருக்க இடமேற்பட்டிராது. 1958-ம் வருடத்தில் தார்பூச்சு இயக்கம் பலாத்காரச் செயல்களுக்கு வழி வகுத்தபோதும் தமிழர்களின் வீடுகள் குண்டுவீச்சுக்கு இலக்கானபோதும்கூட பொலிசார் உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறினர். பார்லிமெண்டில் அச்சமயம் நடைபெற்ற விவாதங்களில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் பலர் சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டதற்கும் வகுப்புக் கலகத்திலும் வெலிமடை எம். பி. நேரடியாகப் பங்கு கொண்டிருந்தார் என்று வெளிவெளியாகவே தெரிவித்தனர். பொலிசார் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தடையாக இருந்ததென்றும் பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவங்கள்பற்றி பாரபட்சமற்ற கமிஷன் விசாரணை நடத்தியிருந்தால் உண்மை வெளிவந்திருக்கலாம். இப்பொழுது பார்லிமெண்டின் முன் நடந்த சம்பவத்தைக் கண்டித்து ஒரு சிங்களப் பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில் இச்சம்பவம் நாட்டுக்கே அவமானமென்றும் காடைத்தனத்துக்கு இடமளிக்கக் கூடாதென்றும் கூறுகிறது. 1956-ம் ஆண்டில் சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டபோதும் அதன்பின் நடைபெற்ற சம்பவங்களின்போதும் சிங்களப் பத்திரிகைகள் ஒன்றுகூட இவ்விதம் கண்டனக் குரல் எழுப்பவில்லை. அப்பொழுதே கண்டித்து அரசியல் பலாத்காரங்களை முளையிலேயே கிள்ளியெறிந்திருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட இடமிருக்காது.

இவை முடிந்த விஷயங்கள். இனியும் இவ்வித பலாத்கார சம்பவங்களுக்கு இடம்கொடுப்பது நாட்டின் அமைதிக்கு நிச்சயம் கேடு விளைக்கும். இச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டின் அமைதியைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தினது தலையாய கடமையாகும்.

# மீண்டும் இளம்பிள்ளை வாதம் எனப்படும் 'போலியோ'

## தடுப்பதற்கு சுலபமான வழி

— டாக்டர் திருமதி ப. துரையப்பா —

1962-ம் ஆண்டில் இளம்பிள்ளை வாதம் (போலியோ) நமது நாட்டில் பெருவாரியாகப் பரவியது. நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு இந்த நோய் வந்தது. சிலர் இறந்தனர். பலர் கைகால் சோர்ந்து முடமானார்கள். யாழ் குடாநாடும் யாழ் நகரும் இந்தக் கொடிய நோயின் தாக்குதலிலிருந்து தப்பவில்லை. இங்கும் பல பிள்ளைகளுக்கு இளம்பிள்ளை வாதம் வந்தது.

நல்ல வேளையாக இளம்பிள்ளை வாதத்தைத் தடுக்க நல்ல மருந்து உண்டு. இந்த மருந்தின் உதவியாலும் மக்களின் ஒத்துழைப்பாலும் 1961 62இல் பரவிய நோய் கட்டுப்படுத்தப்பட்டது. நோய் வெள்ளம் தொடர்ந்து பரவி நமது குழந்தைகளைப் பாதிக்க முன் மருந்து அணை கட்டப்பட்டது.

1965ஆம் ஆண்டில் இலங்கையில் மறுபடியும் இளம்பிள்ளை வாதம் பெரிய அளவில் பரவும் என எதிர்பார்த்தோம். இளம்பிள்ளை வாதம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஒரு நாட்டில் பெருவாரியாகப் பரவுவது உண்டு. அதற்கு வைத்திய விளக்கமும் இருக்கிறது. ஆகவே 1965-ல் நாம் இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்தைக் கொடுக்க இருந்தோம். நமது பிள்ளைகளைக் காப்பாற்ற அது தான் நல்ல வழி; ஒரே வழி.

ஆனால், நாம் எதிர்பார்த்த காலத்துக்கு முன்பே, 1964ன் பிற்பகுதியிலேயே இளம்பிள்ளை வாதம் தன்னைக் காட்டிக்கொண்டது. பரவத் தொடங்கிவிட்டது. கொழும்பிலும் கேகாலையிலும் கவலைப்பட வேண்டிய அளவிற்கு அது பரவியுள்ளது.

### யாழ்ப்பாணத்தில்....

சமீப மாதங்களிலே யாழ்ப்பாணத்தில் 12பிள்ளைகள் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவரேனும் இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்தை எடுக்காதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. யானை வருவதற்கு முன் மணி ஓசை கேட்கும் என்பார்கள். 12 குழந்தைகளின் அவல ஓசைகளைக்கொண்டு நமது நகருக்கு வர இருக்கும் ஆபத்தை எதிர்பார்ப்பது அவசியமல்லவா?

### தடுப்பு மருந்து

இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்து வைத்திய ஆராய்ச்சியில் இந்த நூற்றாண்டுச் சாதனை. அது ஆபத்தில்லாதது. அருமையானது. அற்புதமானது. அது காத்தல் தெய்வம், மனிதன் மூலம் குழந்தைகளுக்கு அளித்த வரப்பிரசாதம் அப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது. கொடிய இளம்பிள்ளை வாத நோயிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றக்கூடியது அது ஒன்றுதான். அதனால் வேறு ஒரு நோயும் வருவதில்லை. இது வைத்திய உலகம் மக்களுக்குத் தரும் உறுதி.

### அன்போடு அறிவு தேவை

நடந்த பிள்ளை இரண்டு நாள் காய்ச்சலின் பின் நடக்க முடியாமல் கிடக்கிறது. தன் சிறு கையினால் சோற்றைத் தாவிய பிள்ளை கையைத் தூக்க முடியாமல் இருக்கிறது. அழகாகச் சிரிக்கும் குழந்தையின் முகத்திலே ஓர் அவலட்சணச் சுழிப்பு. இதையெல்லாம் பார்க்க எந்தப் பெற்றோர் விரும்புவர்? அன்பு மனம் படைத்த எவர் தான் விரும்புவர்? தமது பிள்ளைகளுக்கு நோய் வரக்கூடாது என்று அன்புமனம் என்றும் பிரார்த்திக்கின்றது. ஆனால் என்ன செய்வதென்று சிலருக்குத் தெரிவதில்லை. சிலருக்கு அது தெரிந்தும் படிக்காத சிலரின் தவறான யோசனையை நம்புகிறார்கள். அன்பு மட்டும் போதாது. அறிவும் ஆற்றலும் வேண்டும். உங்கள் இணையில்லா அன்போடு, வைத்திய ஆராய்ச்சியாளரின் அறிவும், சுகாதாரத் தொண்டரின் உழைப்பும் சேர்ந்து உங்கள் மக்களை வாழ வைக்கட்டும். ஆலோசனை தேவையானால் உங்கள் டாக்டரை கேளுங்கள்.

### தடுப்பு இயக்கம்

இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்தை மறுபடியும் இலங்கையில் கொடுக்கிறார்கள். நாம் யாழ்நகரில் இம்மாதம் பதினாலாம் திகதி தொடக்கம் கொடுப்போம். யாழ்ப்பாணச் சுகாதாரக் கந்தோரிலும், குழந்தைசிகிச்சை நிலையங்களிலும் மருந்து கொடுக்கப் புதிதாக ஏற்படுத்தும் நிலையங்களிலும் மருந்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு நிலையமேனும் இருக்கும். இடமும் நேரமும் உங்களுக்கு பிரசுரங்கள் மூலமும் சுகாதார ஊழியர்கள், தொண்டர்கள் மூலமும் அறிவிக்கப்படும். சிசுக்களுக்கும் எட்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் தடுப்பு மருந்து கொடுக்கப்படும்.

இதற்குமுன் இந்தத் தடுப்பு மருந்தை எடுத்த குழந்தைகள், எத்தனை தடவை எடுத்திருந்தாலும், இந்தத் தடவையும் ஒரு தரம் எடுக்கவேண்டும்.

பெற்றோர் இவற்றை ஞாபகத்தில் வைத்து, நம்முடன் ஒத்துழைத்துத் தமது குழந்தைகளைக் காப்பாற்றும்படி வேண்டுகிறோம். நமது அன்புடன் அறிவும் அவர்கள் வளர்ச்சிக்குத் தேவை என்பதை நாம் மறக்கலாகாது.

### ஹர்த்தால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தம் ஒன்றை நடத்துமாறு ஆஸ்பத்திரி தவிர்ந்த ஏனைய அரசாங்க, தனிப்பட்ட, ஸ்தாபன தொழிற் சங்கங்களை கேட்டுக் கொள்கிறோம். இந்த வேலைநிறுத்தத்துக்கு பூரண ஒத்துழைப்புக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**ஊர்வலம்**

பொதுத் தேர்தல் நடத்துமாறு கோரி இம்மாதம் 12-ம் திகதி கொழும்பு நகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துவதென எதிர்க்கட்சியினர் தீர்மானித்துள்ளனர். இந்த ஊர்வலத்தைத் தொடர்ந்து கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

### என். எம். மறுப்பு

லண்டன், டிச. 8

இங்குள்ள யூனிவசிட்டி காலேஜ் ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை பெற்றுள்ள இலங்கை நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா, இலங்கை அரசாங்கம் வீழ்ச்சி பற்றியும், தற்பொழுதுள்ள இலங்கை பற்றியும் அபிப்பிராயம் கூற மறுத்துவிட்டார்.

ஆஸ்பத்திரியில் கடமையாற்றுபவர் யாரேனும், 'சிஸரர்' ரிடம் இலங்கை அரசியல் பற்றி பத்திரிகை நிருபர்களுக்கு அபிப்பிராயம் தெரிவிக்கப்போவதில்லையென டாக்டர் பெரேரா கூறியுள்ளதாக அறியப்படுகிறது.

ஆஸ்பத்திரியிலிருந்து இன்னும் இரண்டொரு தினங்களில் வெளியேறும் இலங்கை நிதிமந்திரி உடனடியாக இலங்கை செல்ல ஆயத்தங்கள் செய்வாரென்றும் அறியப்படுகியது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

ரின் கும்பாபிஷேகம் இன்றாகும். அந்தப் பிள்ளையார் அருளால் இந்துக்கல்லூரி சரஸ்வதி மண்டபமும் தமிழருக்குக் கிடைத்துள்ளது. இன்னும் இந்துப் பெண்களுக்கு ஒரு முதல்தர கல்லூரியை அங்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் சைவ மங்கையர் கல்லூரியை பெண்களுக்காக கைத்தொழில் கல்லூரியாக மாற்ற வேண்டுமென்றும் ஓர் அன்பர் நல்ல யோசனை தெரிவித்துள்ளார்.

சைவ மங்கையர் கல்லூரி ஒன்றுதான் அரசாங்கத்திடம் ஒப்படைக்காமல் தனிப்பட்ட இந்துக்கல்லூரியாக நடைபெற்று வருகிறது. சென்ற மூன்றாண்டுகளுக்கு மேல் அவர்கள் அரசாங்க உதவி இன்றி இக்கல்லூரியை நடத்தி வருவது பெரிய ஆச்சரியம்!

அப்பிள்ளையாரின் அருளால் அங்கு சைவ மங்கையருக்கு அரசாங்க உதவியுடன் நல்ல கல்லூரி ஏற்படுமாயின் அது பல விதங்களிலும் வரவேற்கத் தக்கதாகும்.

தெய்வ பக்தியும் தர்ம சிந்தையுமுள்ள சம்மங்கோட்டார்களை நன்றியுடன் போற்ற வேண்டும்.

* * *

சிலந்திக்கருள் முன்னாள் செய்தான் கண்டாய் திரிபுரங்கள் தீவாய்ப் படுத்தான் கண்டாய், நிலத்துக்க நீர்வளி தீயானான் கண்டாய் நிருபேயருபியுமாய் நின்றான் கண்டாய், சலத்துக்க செஞ்சடையான் கண்டாய் தாமரையான் செங்கண்மால்தானே கண்டாய் மலத்துக்கமால்விடை யொன் ஊர்ந்தான் கண்டாய் மறைக்காட்டுறையும் மணாளன்தானே,

—அப்பர்சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

ஒரே ஒரு வாக்கினால் அரசாங்கம் தோல்வியடைந்த தினத்தில் கொழும்பூரெல்லாம் ஒரே திருவிழாக்கோலமாக இருந்ததாம். யாழ்ப்பாணத்திலிருந்து அன்று கொழும்புக்குச் சென்றிருந்த ஓர் அன்பருக்கு முதலில் இது ஒன்றுமே புரியவில்லை. அரசாங்கம் தோற்ற சமாச்சாரம் அவருக்குத் தெரியாதாம்.

பின்னர் வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவிலில் அந்த அன்பர் இருக்கையில் டட்லியும், ஸி. பி. டி' சில்வாவும் காரில் கோவிலுக்கு வந்து வணங்கியதாயும், அவரது ஆதரவாளர்கள் அதிகம் கூடி சுமார் ஆயிரம் சிதறு தேங்காய்களைப் பிள்ளையாருக்குப் படபட வென்று உடைத்ததாயும், அன்பர் தெரிவித்தார்.

பிள்ளையாரிடம் டட்லியும், சில்வாவும் சென்றது நல்லது தான். முன்னர் டட்லியும் தோற்றாரல்லவா? அப்போது யாரும் பிள்ளையாருக்கு இப்படித் தேங்காய் உடைத்தார்களா என்பது தெரியவில்லை. முன்னர் ஏன் தோற்றாரென்பதை டட்லிக்கு அந்தப் பிள்ளையார் கனவிலாவது தோன்றித் தெரிவித்தால் நல்லது. தமிழருக்கு நீதி வழங்கவேண்டுமென்றும், அந்த ஜனநாயக நீதியை மறுப்பவர்களுக்குத் தோல்விதான் ஏற்படுமென்ற பாடத்தை இப்போதாவது டட்லியும் மற்றவர்களும் உணருமாறு அந்தப் பிள்ளையார் அவர்களுக்கு நல்ல புத்தி அருளவேண்டுமென்பதே அந்தப் பிள்ளையாருக்கு எனது பிரார்த்தனை.

* * *

வல்வெட்டித்துறையிலிருந்து ஓர் அன்பர் எழுதுவதாவது:—

"தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோயில் வருடத்தில் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் நாலைந்து மாதங்களில் ஊரவர்களால் கொடுக்கப்படும் அன்னதானம் குறைவடைவது வழக்கம். இக்குறையை ஸ்ரீ முருகன் அன்னதான சபை நிறைசெய்து வருகிறது. அன்னதானம் இல்லாத நாட்களிலே, ஆலயமடங்களில் தங்கியிருக்கும் கூன்-குருடு வயோதிபர், ஏழைகள் ஆகிய கிட்டத்தட்ட நூற்றைம்பது பேர்களுக்கு அன்னதானம் அளிப்பதே இச்சபையின் அடிப்படை நோக்கமாகும். அதற்காகவே இச்சபையும் ஸ்தாபிக்கப்பட்டு அத்தொண்டினைச் செய்து வருகிறது. மூன்று வருடங்களாக இவ்வாண்டில் இச்சபை அதிகமான நாட்களில் அன்னதானமளித்துள்ளது. இந்தத் தர்மத்தில் மேலும் பலர் பங்குபற்றி முருகன் அருளைப் பெறுவார்களாக" என்று குறிப்பிட்டுள்ளார்.

செல்வச்சந்நிதி முருகனின் கருணையை அன்னதானத்தில் தான் நேர்முகமாகப் பார்க்கிறோம். உயிர்களுக்கு உணவூட்டி, கருணை காட்டுபவர்களுக்கு, முருகனின் கருணையும் கிடைப்பதாகும். செல்வச்சந்நிதிபோன் ஒவ்வொரு ஊரிலும் அன்னதானசபையை ஏற்படுத்தி, இந்த நல்ல தர்மத்தைச் செய்ய ஒழுங்கு செய்ய முடியாதா? தமிழ் மன்னர்கள் ஆண்ட காலத்திலே தர்மசத்திரங்கள் இல்லாத ஊர் கிடையாது. தமிழாட்சி மறைய இந்தத் தர்மங்களும் மறைந்துவிட்டன. மீண்டும் இங்கு ஒவ்வொரு ஊரிலும் கோவில் மூலம் அன்னதானம் நடைபெறச் செய்ய வேண்டியது அவசியமாகும். அப்படிச் செய்வதால், அந்த ஊர் மக்களுக்கே தெய்வத் திருவருள் கிடைப்பதாக இருக்குமல்லவா?

* * *

வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் மாணிக்கவிநாயக

(4-ம் கலம் பார்க்க)

# நிலத்தடி அணு சோதனை உட்பட சகல பரிகரணத்துக்கும் தயார்

## ஐ. நா. பொதுச்சபையில் ரஷ்யா சமர்ப்பித்த 11 அம்ச கொள்கை

### "புதிதாக ஒன்றுமில்லை" என அமெரிக்கா அலட்சியம்

நியுயோர்க், டிச. 8

நிலத்தடியில் அணுசோதனை நடத்துவது உட்பட சகல வகையான ஆயுத பரிகரணத்துக்குமாக உச்சிமட்டத்திலோ அல்லது எந்த மட்டத்திலோ பேச்சு நடத்த சோவியத் யூனியன் தயாராய் இருக்கிறது என வெளிநாட்டு மந்திரி குரோமிகோ நேற்று ஐ. நா. பொதுச்சபையில் 11 அம்சக் கொள்கை அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலத்தடி அணுசோதனை உட்பட சகல சோதனைகளையும் நிறுத்தவும், துரிதமான ஆயுதப் பரிகரணம் ஏற்படுத்தவும் கருத்து வேற்றுமைகளைக் குறைக்கவும் அவரது 11 அம்சத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மத்திய ஐரோப்பா உட்பட உலகின் சில பகுதிகளிலும் அணுசூன்யப் பிரதேசங்கள் அமைப்பதை ரஷ்யா ஆதரிக்கிறது.

காங்கோ, சைப்பிரஸ் ஆகிய இடங்களில் மேற்கு நாடுகளின் தொல்லைகளை குரோமிகோ கண்டனம் செய்தார்.

"வடவியட்னாம் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கிறது. அப்படி ஏற்பட்டால் ரஷ்யா சும்மா பார்த்துக்கொண்டிராது. எல்லா வகையிலும் ரஷ்யா வடவியட்னாமுக்கு உதவி புரியும்" என்றும் குரோமிகோ கூறினார்.

எல்லைத் தகராறுகளை சமாதான பேச்சு மூலம் தான் தீர்க்க வேண்டும் என குரோமிகோ வற்புறுத்தினார்.

அணு ஆயுதங்கள் பரவுவதைத் தடுத்தல், வெளிநாட்டு இராணுவத் தளங்களை வாபஸ் பெறுதல், நேட்டோவுக்கும் வார்சாவுக்குமிடையே அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தல் முதலியனவும் குரோமிகோவின் 11 அம்சத் திட்டத்தில் அடங்கியுள்ளன.

நேட்டோ பல முனைத் தாக்குதல் முஸ்தீபு அணு ஆயுதங்களை மேலும் பரவச் செய்யும் என்றார் குரோமிகோ.

அமெரிக்கப் பிரதிநிதி அட்லாய் ஸ்டீவன்ஸன் பேசுகையில் இது வல்லரசுக் குழுப்பேச்சு என்றும், குரோமிகோவின் பேச்சில் புதிதாக ஒன்றுமில்லை என்றும் குறிப்பிட்டார்.

---

# சீனாவின் ஆதிக்க வெறிக்கு டிட்டோ கண்டனம்

### "அணு சோதனை ரஷ்ய போக்கை மாற்றவில்லை"

பெல்கிரேட், டிச. 8

ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான தாவர உள்விவகாரம் இல்லை என்றும், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்துவதே சீனாவின் நோக்கமென்றும் யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோ யூகோ கம்யூனிஸ்ட்கட்சி மகாநாட்டில் கூறினார்.

இது அதிகாரப் போட்டியே ஒழிய, அதற்கு லட்சியவாதம் சம்பந்தம் எதுவும் கிடையாது என்றும் டிட்டோ கூறினார்.

"சீனத்தலைவர்கள் தங்கள் கருத்துக்களைப் பிறர் மீது திணிக்க முயற்சிக்கிறார்கள். பெரும்பகுதி பிரதேசங்களைத் தங்களுக்குடையது என அவர்கள் உரிமை கோருகிறார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

"சீனா அணுக்குண்டு சோதனை நடத்தியது உருப்படியான படைக்குறைப்பில் ஒத்துழைக்க அது தயாராயில்லை என்பதையே காட்டுகிறது. தங்கள் அணுசோதனையின் மூலம் ரஷ்யாவின் மனதை மாற்ற சீனா முயன்றது. ஆனால் இதில் தோல்வியுற்றதால், ரஷ்யத் தலைவர்கள் மீது இப்போது கண்டனம் தெரிவிக்க ஆரம்பித்திருக்கிறது" என்றும் டிட்டோ கூறினார்.

முன்னாள் ரஷ்யப் பிரதமர் பற்றி குறிப்பிடுகையில், திரு. குருஷ்சேவ் தவறு செய்தபோதிலும் கருத்துச் சுதந்திரத்தை வளர்க்கவும், உலக சமாதானத்துக்கும் அவர் பெரும்சேவை செய்திருக்கிறார் எனக் கூறினார் டிட்டோ.

---

# பூட்டான் உள்விவகாரத்தில் இந்தியா தலையிடவில்லை

### குற்றச்சாட்டுக்கு மறுப்பு

புதுடில்லி, டிச 8

பூட்டானுக்கு இந்தியாவுடனான உறவு நேசமும், மகிழ்ச்சியும் கொண்டு விளங்குகிறது என இந்திய வெளிவிவகார இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

பூட்டானில் ஒரு கட்சிக்கெதிராக மற்றோர் கட்சிக்கு இந்தியா ஆதரவளிக்கிறதென்பது பொய்யானது, விஷமத்தனமானது என்றும் அவர் கூறினார்.

பூட்டானிலிருந்து சமீபத்தில நேபாளத்துக்கு ஓடிச்சென்ற பூட்டான் ராணுவ அதிகாரிகள், அந்த நாட்டுக் குழப்பத்திற்கு இந்தியா தான் காரணம் என்று குற்றம் சாட்டியதற்குப் பதிலளிக்கும்வகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

பூட்டான் மன்னர் அவரது அரசாங்கம் அல்லது மன்னரால் நியமிக்கப்படும் ஒருவர் ஆகியவர்களுடன்தான் இந்தியா ஒத்துழைப்பு அளித்து வந்திருக்கிறது என்றும் வெளிநாட்டிலாகா அதிகாரி கூறினார்.

பூட்டான் பிரதமர் ஜிக்மி டோர்ஜி கொலை செய்யப்பட்டபின் புதிய பிரதமருக்கு இந்தியா முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாயும் அவர் தொடர்ந்து கூறினார்.

---

# சூடானில் நீக்ரோ-அராபியர் கைகலப்பு: 14 பேர் பலி!

கார்டூம், டிச 8

சூடான் தலைநகர் கார்டூமில் கடந்த 2 தினங்களாக அராபியர்களுக்கும் நீக்ரோக்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் 14 பேர் மாண்டனர். 400 பேர் காயமடைந்தனர்.

நிலைமையைச் சமாளிக்க துருப்புகள் கொண்டுவரப்பட்டன. வடக்கிலுள்ள அராபியர்கள் தங்களை ஆதிக்கம் செலுத்துவதாக தெற்கிலுள்ள நீக்ரோக்கள் நேற்று அராபியர் மீது தாக்குதல் நடத்தினர். அராபியர்கள் பதிலுக்குத் தாக்கினர்.

பல கட்டிடங்களுக்குத் தீ வைக்கப்பட்டது

ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

சூடான் பிரதமர் இந்தத் தகவலை அறிவித்தார்.

---

# காங்கோவில் மேற்கு தலையீட்டுக்கு ஆபிரிக்க நாடுகள் கண்டனம்

### ஆனால் ஷோம்பே வரவேற்பு

நியுயோர்க், டிச. 8

காங்கோவில் அமெரிக்காவும் பெல்ஜியமும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகுறித்து ஐ. நா.வில் கென்யா, எதியோப்பியா, உகண்டா ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

இதற்கிடையில் காங்கோ நிலைமை பற்றி பிரதமர் ஷோம்பே ஐ. நா.வுக்கு ஒரு அறிக்கையை அனுப்பியிருக்கிறார்.

ஸ்டான்லிவில்லியில் 7000 பேர் கலகக்காரர்களால் கொல்லப்பட்டதாய் அவர் கூறியிருக்கிறார். அங்கு சித்திரவதை செய்து கொல்லும் புகைப்படங்கள் பலவற்றையும் அவர் அனுப்பி வைத்திருக்கிறார் என அறிவிக்கப்பட்டது.

அமெரிக்கத் தலையீட்டின் காரணமாகத்தான் 2000 பேரை உயிருடன் மீட்க முடிந்தது என திரு. ஷோம்பே தன் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

கிளர்ச்சிக்காரர்களுக்கு சீனாவும் வேறுசில நாடுகளும் உதவியளித்து, காங்கோ உள்விவகாரத்தில் தலையிட்டுவருவதாய் ஷோம்பே குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

---

# "கப்பல்தான் வேண்டும்"

டம்பாய், டிச. 8

தமக்கு இந்தியாவில் அளிக்கப்பட்ட "அபூர்வ பரிசுகள்" அனைத்தையும் தம்முடன் ரோமாபுரிக்கு எடுத்துச் செல்ல வேண்டுமானால், தாம் கப்பலில்தான் போக வேண்டும் என்றும், விமானத்தில் செல்ல முடியாது என்றும் போப்பாண்டவர் பால், கருதினால் கிரேஷியஸிடம் தெரிவித்தார்.

---

# உப தேர்தல்கள்

புதுடில்லி, டிச. 8

லோகசபைக்கு நடைபெற்ற 3 உப தேர்தல்களில் காங்கிரஸ் ஒரு ஸ்தானத்திலும், சுயேச்சைகள் 2 ஸ்தானங்களிலும் வெற்றிபெற்றிருக்கின்றனர்.

---

# லாமா மகிழ்ச்சி

புதுடில்லி, டிச 8

இந்தியாவிலுள்ள திபெத்திய அகதிகளுக்கு அளிக்கப்படும் புனர்வாழ்வு ஏற்பாடுகளை குறித்து தலாய் லாமா மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். இந்தியாவில் 40,000 திபெத்திய அகதிகள் இருக்கிறார்கள்.

அணுக்குண்டு உற்பத்திசெய்வதில்லை என்ற சாஸ்திரியின் முடிவுக்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

---

# கோவா கவர்னர் காலமானார்

பஞ்சிம், டிச. 8

கோவா, டாமன், டியு ஆகிய பிரதேசங்களின் லெப்டினண்ட் கவர்னர் எம் ஆர். சச்தேவ் இன்று அதிகாலை 4 மணிக்கு மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 61.

நேற்றிரவு திடீரெனச்சுகவீனமுற்ற அவருக்கு காலை 2 மணிக்கு பிராணவாயு செலுத்தப்பட்டது.

1963-ம் ஆண்டுசிவில் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற சச்தேவ் கோவா லெப்டினண்ட் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

---

# "பகைநாடு ஆயுத பலம் பெற்றுவருகிறது"

### பலமான தலைமைக்கு வாக்களிக்க பாக். அதிபர் வேண்டுகோள்

ராவல்பிண்டி, டிச 8

பலமான மத்திய அரசாங்கத்துக்கும், நாட்டின் அரசியல் ஸ்திரத்திற்கும் ஏற்ப வாக்களிக்குமாறு தேர்தல் கல்லூரி உறுப்பினர்களை பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் கேட்டுக் கொண்டார்.

"தேசிய நலனைக் கருத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும்" என்றும், அண்டையில் உள்ள பகை நாடொன்று மேலும் ஆயுத பலம் பெற்று வருவதால், பாகிஸ்தான் ஒரு திருப்பமுனையில் இருந்து வருகிறதென்றும், இந்தச்சவாலை சமாளிக்க உறுதியாக பலமான மத்திய அரசாங்கத்துக்கும், அரசியல் ஸ்திரத்துக்கும் வாக்களிக்க வேண்டும் என்றும் அயூப்கான் கேட்டுக் கொண்டார்.

மிஸ் பாத்திமா ஜின்னா பேசுகையில் எவ்வித அச்சமுமின்றி தேர்தல் கல்லூரி உறுப்பினர்கள் ஜனாதிபதி தேர்தல்களிலும், மத்திய, ராஜ்ய சட்டசபைத் தேர்தல்களிலும் வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

தான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் நாட்டு மக்களுக்கு அதிக சுதந்திரம் அளிக்கப்படும் என்றும் கூறினார்.

---

# "ஹிந்தியில்தான் அறிக்கை அனுப்புவேன்"

### — தூதர் கூற்று

புதுடில்லி, டிச 8

அரசாங்கத்துக்குத் தமது அறிக்கைகளை ஹிந்தியில்தான் அனுப்பப்போவதாய் நேபாளத்திலுள்ள இந்தியத்தூதர் திரு. ஸ்ரீமான் நாராயண் வெளிநாட்டிலாகாவிற்குத் தெரிவித்திருக்கிறார்.

இந்தியத் தூதர் ஒருவர் இத்தகைய நடவடிக்கை மேற்கொண்டிருப்பது இதுவே முதல் தட்வை. அரசாங்கத்தில் மற்ற இலாகாக்களைப் போலவே ஆங்கிலத்தில்தனது அலுவலை நடத்திவரும் வெளிநாட்டு இலாகாவுக்கு இந்த முடிவினால் பெரிய சிரமம் ஏற்படும்.

தாம் அளிக்கும் வரவேற்புகளில் மதுபானங்களைச் சேர்ப்பதில்லை என்பது ஸ்ரீ நாராயண் செய்துள்ள மற்றோர் முடிவாகும். அவர் நடத்தும் வரவேற்புபசாரங்களில் துளசி ஜலத்துக்கு அதிக முதலிடம் தரப்படும். ஹிந்துக்களுக்கு துளசி இலை மதசம்பந்தமான முக்கியத்துவம் வாய்ந்தது.

---

# ஏழுமலையானுக்கு ஏழரை லட்சம்

திருமலை, டிச. 8

ஸ்ரீ ஏழுமலையானுக்கு கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 7,48990—30 வருமானம் கிடைத்திருப்பதாயும் 325 1 2 ரூபாய் ஹைதராபாத் ஹாலி நாணயமாகவும் வருமானம் கிடைத்திருப்பதாயும், கோயிலின் இதர வருமானங்கள், தேவஸ்தானத்தைச் சேர்ந்த இதர கோயில்களின் வருமானங்கள் ஆகியன இக்கணக்கில் சேர்க்கப்படவில்லை என்றும் குமாஸ்தா ஸ்ரீ பார்த்தசாரதி நிருபர்களிடம் தெரிவித்தார்,

---

# அலிகார் பூட்டுக்கு உலக கிராக்கி

ஆக்ரா, டிச. 8

அலிகார் பூட்டுகளின் மூலம் இந்தியாவுக்கு ஆண்டு தோறும் ரூ. 10 லட்சம் பெறுமான அன்னியச் செலாவணி கிடைப்பதாகவும், ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய, தென்னமெரிக்க நாடுகளில் இப்பூட்டுகள் பிரபலமாகி இருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

100 வகையான பூட்டுகளைச் செய்யும் சுமார் 350 தொழிற்சாலைகள் அலிகாரில் உள்ளன. அவை நாள்தோறும் 1,25,000 பூட்டுகளைச் செய்கின்றன.

---

# கராச்சியில் கல்லூரிகள் மூடப்பட்டன

கராச்சி, டிச. 7

கராச்சியில் மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து எல்லா கல்வி நிலையங்களும் காலவரையறையின்றி மூடப்பட்டன. நேற்று மாணவர் வேலைநிறுத்தத்தின் 7-ம் நாள் 20 கல்லூரிகளைச் சேர்ந்த 400 ஆசிரியர்கள் நேற்று வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்வதெனத் தீர்மானித்தனர். அடுத்த மாதம் 11-ம் திகதி மற்ற ஆசிரியர்கள் பலர் வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ள முடிவு செய்தனர்.

# "பார்லிமெண்டைக் கலைத்து உடன்தேர்தல்நடத்தவேண்டும்"

## அளவெட்டியில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேச்சு

நல்லூர், செவ்வாய்

"மக்கள் பிரதிநிதிகள் சபையில் நம்பிக்கையிழந்து விட்ட அரசாங்கம் உடனடியாகப் பார்லிமெண்டைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்த வேண்டும், தமிழ் மக்களின் ஆதரவு இன்றி அரசாங்கம் நீடித்து நிலைக்க முடியாது" என்று தமிழரசுக் கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அளவெட்டியில் நடைபெற்ற தமிழரசுக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அளவெட்டியில் புதிய தமிழரசுக் கட்சிக்கிளை ஒன்றினை அங்குரார்ப்பணஞ்செய்து வைத்துப் பேசுகையில் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் கையிலேதான் அரசாங்கத்தின் உயிர் தங்கியுள்ளது. இதனையே 1960-1964ம் ஆண்டு சம்பவங்கள் உணர்த்துகின்றன. தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பு நீடித்துவருவதே அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

1949-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிவருகிறது. தமிழ் மக்களை அடிமைகளாக்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளையெல்லாம் தமிழரசுக் கட்சி எதிர்த்துப் போராடி வந்துள்ளது.

தமிழர் ஆதரவின்றி அரசாங்கம் நிலைக்கமுடியாது என்பது கடந்த வியாழனன்று நிரூபணமாகிவிட்டது. அரசாங்கத்திற்கு உயிர் கொடுக்க சிலர் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

மக்கள் பிரதிநிதிகள் சபையில் தோல்வியுற்ற அரசாங்கம் உடனே பார்லிமெண்டைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தவேண்டும். இதுவே ஜனநாயகமுறை. ஆனால் அரசாங்கம் தோல்வியுற்று ஐந்து நாட்களாகியும் இதுவரை அரசாங்கம் எந்தவிதமான முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. வானொலிப் பேச்சில் பிரதமர் உறுதியளித்துள்ள போதிலும் அவர் பதவியில் ஒட்டிக்கொண்டேயிருக்கிறார்.

அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். ஆபத்தான சூழ்நிலையில் இன்று நாம் வாழுகிறோம். ஓரணியில் தமிழ் மக்கள் திரண்டு தமது எதிர்காலத்தை நிர்ணயிக்கவேண்டும்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசியதாவது:

புத்தஜெயந்திக் கூட்டத்திற்கா ஐக்கிய தேசியக் கட்சி நிதி ஒதுக்கியபோது ஜனநாயக நாட்டிலே சமய அடிப்படையிலே ஆட்சி நடைபெறுவதனைக் கண்டித்துச் சீறியெழுந்த டாக்டர் என். எம். பெரேரா இப்போது இந்த நாட்டை ஒரு பௌத்த சிங்கள நாடாக்க அரசாங்கத்துடன் ஒத்துழைக்கின்றார்.

தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளை ஓரணியின்கீழ் உள்ளவர்களாக அனுப்பினால்தான் அரசாங்கத்தை வற்புறுத்தியேனும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின்மூலம் உரிமை பெற வழிபிறக்கும். இடதுசாரிகள் தமிழ் மக்கள் உரிமைகளுக்காக முதலைக் கண்ணீர் வடித்த காலம் மலையேறிவிட்டது. தமிழர் துவேஷக் கொள்கையுடைய அரசாங்கத்திலே அவர்கள் மந்திரிப் பதவி பெற்றிருக்கிறார்கள். தமிழரின் உரிமையை தமிழரசுக் கட்சியினால்தான் பெற முடியும். அரசாங்கம் தனது சர்வாதிகாரப் போக்கினால் நாட்டினை அழிவுப் பாதையிலே வழிநடத்திச் செல்ல தயாராக உள்ளது. இச்சமயத்தில் மக்கள் விழிப்புடன் இருக்க விடில் ஜனநாயகம் அழிந்து யதேச்சாதிகாரம் தலை தூக்கும். அடுத்த தேர்தல் தமிழர்களுக்கு மிகவும் அதிமுக்கியமாய்ந்தது.

மற்றும் பலரும் பேசினர்.

—

## "நாவலர் பாதையில் ஒழுகவேண்டுதேமுக்கியம்"

காச்சாய், செவ்வாய்

'நல்லூர் ஆறுமுக நாவலர் தூய வசனநடையில் யாவருக்கும் ஏற்ற நூல்களை எழுதி அச்சிட்டு தமிழ்ப் பஷையை வளமுறச்செய்தவர். சமயத்தை அணிபதுடன் வாழ்வுக்கும் ஓர் லட்சியத்தைக் காட்டியவர் இவர் நயன்மார் நிரையில் வைத்துப் பூஜிக்கத்தக்கவர். இவருக்கு சிலைநாட்டுவதும் விழா எடுப்பதும் பொருத்தமே. ஆனால் அவர் இலட்சியப்பாதையில் நடப்பதே எல்லாவற்றிலும் முக்கியம்."

இவ்வாறு கலவெட்டித்திடல் காந்தி சேவாசங்க ஆதரவில் நாகேஸ்வர வித்தியாசாலையில் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்ட நாவலர் தின விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றிய 'கலைமணி' இ. த. சுப்பிரமணியம் கூறினார்.

கிராம சேவகர் திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி, இளைப்பாறிய கிராம அதிகாரி திரு. எஸ். கந்தையா, திரு க. தம்பிப்பிள்ளை, திரு. வேலுமயில் வாகனம் உட்பட பலர் பேசினர்.

# சீமெந்தை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகிக்குக

## கூட்டுறவு மகாநாட்டுக்கு வரவிருக்கும் பிரேரணை

யாழ்ப்பாணம், புதன்

வீடுகட்டுவதற்கு அத்தியாவசியமான மூலப்பொருளாகிய சீமெந்தை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யக்கூடிய ஒழுங்குகளைச் செய்துதருமாறு கைத்தொழில் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இம்மாதம் பதினெட்டாம், பத்தொன்பதாம் திகதிகளில் நடைபெறவிருக்கும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வருடாந்தக் கூட்டுறவு மகாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கிறது.

இம்மாதம் பதினெட்டாம் திகதி காலை 9-30 மணியளவில் மகாநாட்டை யாழ் மாநகர சபை மண்டபத்தில் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. எச். எவ். வணசிங்கா ஆரம்பித்து வைப்பார். இருநாள் நிகழ்ச்சிகளிலும் கூட்டுறவுத் துறையில் தேர்ச்சிபெற்ற பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

மகாநாட்டுக்கு வரவிருக்கும் மற்றும் முக்கிய பிரேரணைகள் வருமாறு:-

கூட்டுறவுச் சங்கங்களில் பெறப்படும் இலாபம் நாட்டின் அபிவிருத்திக்கான விவசாயக் கைத்தொழில் சம்பந்தமான ஆக்க முயற்சிகளில் முதலீடு செய்யப்பட்டு வருவதனாலும் விற்பனவு வரி கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாதார நிலையை மிகவும் பாதிப்பதாலும் இவ்வரியிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிவிலக்கு அளிக்கும்படி இம்மகா சபை நிதிமந்திரியைக் கேட்டுக்கொள்கின்றது.

தற்போது இலங்கைச் சீமெந்துக் கூட்டுறவுத் தாபனத்தால் கையாளப்பட்டுவரும் சீமெந்து விநியோக முறை உண்மையான சீமெந்துப் பாவனையாளருக்கு தமது தேவைக்கு நியாயமான விலையில் சீமெந்து பெறமுடியாத கஷ்டத்தைக் கொடுத்துவருகின்றது. எனவே, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கூட்டுறவுச் சமாசங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுவதுபோல் வீடுகட்டுவதற்கு அத்தியாவசியமான மூலப்பொருளாகிய சீமெந்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யக்கூடிய ஒழுங்குகளை நிறுவித்தருமாறு கைத்தொழில் அமைச்சரை இம்மகாசபை வேண்டிக்கொள்ளுகிறது.

சீனாவிலிருந்து இலங்கை அரசாங்கம் பெறும் மின்விசைத் தறிகளை நெசவுத் தொழிற்சாலைகள் நிறுவவிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பகிர்ந்து கொடுக்குமாறு கைத்தொழில் அமைச்சர் இம்மகா சபை வேண்டிக்கொள்ளுகிறது.

—

பாரிஸ், டிச. 8

கடந்த 19-ம் திகதி பிரான்ஸ் சகாரா பாலைவனத்தில் ஓர் அணு சோதனையை நடத்தியதாய் அறிவிக்கப்பட்டது.


எல்லோருமே தமக்கு வேண்டிய மலர்களுக்கும், மரக்கறி விதைகளுக்கும் எஸ். ஏ. பெர்னண்டோ விடமே ஆடர்செய்கிறார்கள்.

ஏன் தெரியுமா........?

........ அவர்கள் நாடு பூராவும் உள்ள மக்களுக்கு கடந்த 23 ஆண்டு காலத்திற்கு மேலாக நறுமணம் கமழும் புது மலர்களும், விதம்விதமான மரக்கறி விதைகளும் விநியோகம் செய்துவருகிறார்கள்.

வேறு எந்த ஸ்தாபனமும் தோற்கடித்துவிட முடியாதவாறு எஸ். ஏ. பெர்னண்டோ ஸ்தாபனத்தார் தமது நற்பெயரை கட்டிக்காத்து வருகிறார்கள். இந்த நற்பெயரே அவர்களுக்கு ஆடர்களைக் குவிக்கின்றன.

நேரடியாகவேனும், கடித மூலமாகவேனும் தொடர்புகொள்ளவும்.

எஸ். ஏ. பெர்னண்டோ

த. பெ. எண்: 16

பழைய பஸார், நுவரேலியா.

தொலைபேசி எண் :283, தந்தி: பாத்திமா.



எனக்கு மிகவும் பிரியமானது




CEYLON CHOCOLATES LTD

கன்டொஸ்

உயர்ந்த ரகச் சொக்கலேற்று




RAVI-CCL-16

Sole Distributors:

SHAW WALLACE & HEDGES Ltd.

Colombo 3.

## கூட்டுறவு சமாஜத்தின் பொதுக் கூட்டம்

பருத்தித்துறை, செவ்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க சமாஜம் புலோலியில் ரூபா 568000 முதலீடு செய்து விசைத்தறி ஒன்றை ஆரம்பிப்பதெனவும் அதற்கு ஆரம்ப முதலீடாக ரூபா 175000 க்கை முதலீடுசெய்வதெனவும் கடந்த 5-வது பொதுக் கூட்டத்தில் முடிவு செய்தது

சங்கத்தலைவர் திரு. செ. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சமாஜ லாபம் 34681 ரூபா 98 சதமாகையால் ஊழியர்கட்கு ஒரு மாத வேதனத்தை சன்மானமாக அளிப்பதென முடிவு செய்ததுடன் சமாஜம் நடத்தும் பாண் தொழிற் சாலையால் மூவாயிரம் ரூபாவுக்கு மேல் இலாபம் கிடைத்திருப்பதாயும் தெரிவிக்கப்பட்டது

உத்தியோகத்தர்கள் தெரிவில் போதுபின்வருவோர் மீண்டும் புதிய உத்தியோகத்தர்களாகபோட்டியின்றிதெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. செ. மாணிக்கவாசகர், உ. தலைவர் திரு. எம். கே. கணபதிப்பிள்ளை, காரியதரிசி: திரு. எம் செல்வராசா.

## புதுவருட உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், புதன்

துறையில் வீரபத்திரர் ஆலய பரிபாலன சபையின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலய பரிபாலனகர்த்தா- திரு. க. தம்பு, தலைவர்- திரு சி. காசிப்பிள்ளை, உபதலைவர் திரு. ச. கதிரவேலு, செயலாளர்- திரு த. கனகரத்தினம் உபசெயலாளர்- திரு வி மார்க்கண்டு, பொருளாளர்- திரு க. கணபதிப்பிள்ளை, கணக்குப் பரிசோதகர்- திரு. செ இளையதம்பி

## தொல்புரம் கோஷ்டி வெற்றி

சுழிபுரம், புதன்

தொல்புரம் சென்னடி இளைஞர் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் சென்னடி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சென்ற சனிக்கிழமை சுழிபுரம் நாவலர் மன்றமும் தொல்புரம் சனசமூக நிலையமும் பங்குபற்றின. இப்போட்டியில் தொல்புரம் சனசமூக நிலையக் கோஷ்டியினர் 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டினர். போட்டிக்கு தொல்புரம் கிராமசேவையாளர் திரு மு தர்மதாசன் மத்தியஸ்தம் வகித்தார்.

இச்சுற்றுப் போட்டியின் கீழ் பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்கும் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் தொல்புரம் கோஷ்டி 2—1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது இப்போட்டிக்கு திரு கே. அரிச்சந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.

## பண்டத்தரிப்பு வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகத்துக்கும் "பிளாக் அன் வைட்" விளையாட்டுக் கழகத்துக்கும், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் பண்டத்தரிப்பு மூன்று கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது.

இந்த போட்டிக்கு திரு தி. வ. அரியரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள்- பிரம்மஸ்ரீ ஐ. ஞானசர்மா, த வல்லிபுரம், பொ. பொன்னுத்துரை, சி. பொன்னுத்துரை, த. கந்தையா, வ. சுப்பிரமணியம், வி க. ...

## 'வடபகுதி கூட்டுறவு இயக்கத்தின் தந்தை'

சாவகச்சேரி, செவ்வாய்

"காலஞ்சென்ற திரு வீரசிங்கம் வடபகுதியில் கூட்டுறவு இயக்கத்தை செப்பமுறச் துலங்கச் செய்தவர். கூட்டுறவு இயக்கத்தில் சாதி சமய பூசல்களுக்கு இடமளிக்காது தானே தலைமைதாங்கி முன்னின்று உழைத்தவர். இவர் வடபகுதி கூட்டுறவு இயக்கத்திற்கு தன்னை தயாரவர். அவர் மறைவு கூட்டுறவு இயக்கத்தற்குபெரியநஷ்டமாகும். இவரின் ஆத்மாசாந்தியடைய நாம் பிரார்த்திப்பதுடன் அவர் இலட்சியத்திற்காக உழைக்க வேண்டும்" இவ்வாறு புளியம்பொக்கணை மத்திய வகுப்பாரின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட கூட்டம் இளைப்பாறிய வித்தியாதரிசி திரு எஸ். சரவணமுத்து தலைமையில் பரந்தன் கூட்டுறவு மண்டபத்தில்நேற்று நடந்தபோது அனுதாபத் தீர்மானத்தைப் பிரேரித்து பேசிய திரு இ. த. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

## வரவு-செலவு திட்டம் ஒரு வாக்கினால் தோல்வி

சுழிபுரம், செவ்

வலிகாமம் மேற்கு ஐக்கிய கூட்டுறவுப் பாற்பண்ணை சங்க விசேட பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு க. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருடத்துக்கான உத்தேச வரவு செலவுக் கணக்கை நிறுதிகாரி சமர்ப்பித்தார். விவாதத்தின் பின்னர் வாக்குக்கு விடப்பட்டபோது தீர்மானம் ஒரு வாக்கினால் தோல்வி அடைந்தது.

## விளம்பரம்

1965-ம் ஆண்டுக்கான முல்லைத்தீவுப் பட்டணசபைக்குரிய இறைச்சிக்கடைகள் 16-12-64-ந் திகதி காலை 11 மணியளவில் பட்டணசபைக் காரியாலயத்தில், பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தல் கேட்க விரும்புவோர் பட்டணசபைக் காரியாலயத்தில் 16-12-64 காலை 10 மணிக்கு முன்பதாக பிணைப்பணம் ரூபா 50-00 கட்டி பற்றுச் சீட்டுப் பெற்று நிந்தனையின் கைச்சாத்திடவேண்டும்.

சித்தி எய்திய கேள்விக்காரன் கேள்வியின் முழுத்தொகையில் காற்பங்கை மூன்று தினத்திற்குள் பட்டணசபைக் காரியாலயத்தில் கட்டி பட்டணசபைத் தலைவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

பட்டணசபைக்கு நிலுவைகள் செலுத்த வேண்டியவர்களின் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

வேறு விபரங்கள் தேவைப்படின் பட்டணசபைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ம. கு. வஸ்தியாம்பிள்ளை
தலைவர்.

பட்டணசபை, முல்லைத்தீவு
பட்டணசபைக் காரியாலயம்.
1-12-64. முல்லைத்தீவு. 1217

## 'லேக்ஹவுஸ்' . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரென ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக இம் மசோதாக்கள் விவாதிக்கப்படவில்லை.

லேக்ஹவுஸ் பத்திரிகைகளை எடுக்கும் மசோதாவை நிறைவேற்றிவிட்டு, பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் பிரதமரைக் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பத்திரிகை சபை மசோதா இப்பொழுது கொண்டுவரப்படமாட்டாதென்றும் பத்திரிகை சபை மசோதாவை வைத்தே அரசாங்கம் தேர்தலில் போட்டியிடவிருப்பதாகவும் மீண்டும் சிறிமா அரசாங்கம் பதவிக்கு வந்தால் முதல் வேலையாக பத்திரிகைச் சபை மசோதாவை நிறைவேற்றும் என்றும் கூறப்படுகிறது.



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உயர்ந்த ரகங்கள்-கண்கவர் டிசைன்களில் புடவைகள், பிளெயின் இன்னும் பல திணுசுகளில் கைத்தறிச் சேலைகள் விற்கப்படும் நெசவு நிலையம், 32, கொழும்புத்துறை ரோட், கண்டிக்குளி. 1182

### புத்திரபாக்கியம்

பெண்களில் மலடு கிடையாது. புத்திரபாக்கியம் இல்லையே என்று கவலை இனி வேண்டாம். நூற்றுக்கணக்கானோர் என்னிடம் மருந்து சாப்பிட்டு பிள்ளையும் பெற்றிருக்கிறார்கள். பொ. செல்லையா, ஆயுர்வேதவைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1176

### ஓம் சாந்தி

எனது சிறிய தகப்பனார் காலஞ்சென்ற திரு வி. வீரசிங்கம் அவர்களின் இறுதிச் சடங்கு வைபவங்களில் பங்குபற்றியவர்களும், அனுதாபச் செய்திகளும் மலர்வளையங்களும் அனுப்பி வைத்தோருக்கும் எனது நன்றி.

திரு மு. ஜெயரத்தினமும் குடும்பத்தினரும்,
1195 நவாலி



யாழ்ப்பாணம், புதன்

மழை இல்லாமையினால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு பயிர் காப்புறுதி ஸ்தாபனம் உடனடி நஷ்டஈடு கொடுக்க வழிவகைகள் எடுப்பதென அகில இலங்கை விவசாய முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகசபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது தீர்மானிக்கப்பட்டது. இரணைமடு குடியேற்ற வாசிகளுக்கு தண்ணீர் கூடுதலாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுப்பதெனவும் கழகத் தலைவர் திரு. வ. தம்பு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# பார்லிமெண்ட் கூட்டத்தை ஒத்திவைக்க முடியாது
## தமிழரசு எம். பி. கருத்து

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 17-ம் திகதிக்கு ஒத்திபோடப்பட்ட பாராளுமன்றக் கூட்டத்தை,மகாதேசாதிபதியோ, சபாநாயகரோ பின்போட முடியாதென்றும் அப்படிப் பின்போட வேண்டுமானால் சபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டபின்பே, சபையை பின்போடலாமென்றும், கோப்பாய் தமிழரசுக் கட்சி எம் பி. திரு. எம். பாலசுந்தரம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

பாராளுமன்றக் கூட்டத்தை குறிப்பிட்ட திகதிக்கு முன் கூட்டலாமேயொழிய, பின்போடுவதற்கு யாருக்கும் அதிகாரமில்லையென்றும், சபைக் கூட்டம் 17-ம் திகதிக்குமுன் கூட்டப்படாவிட்டால், 17-ந் திகதி நிச்சயம் கூட்டப்படவேண்டும் என்றும் திரு. பாலசுந்தரம் மேலும்தெரிவித்தார்

இம்மாதம் 15-ம் திகதி லண்டனிலிருந்து இங்கு வந்துசேருவாரென எதிர்பார்த்த நிதி மந்திரி தவிர்க்கமுடியாத சில காரணங்களால் இம்மாதம் 19-ம் திகதியே இலங்கை வந்து சேருவார் என்றும் அதனாலேயே பாராளுமன்றத்தைப் பின்போட அரசாங்கம் யோசித்துள்ளதாகவும் தெரியவருகிறது

## பஸ் சாரதிக்கும் தங்கப் பதக்கம்!

யாழ்ப்பாணம் புதன்

பொதுமக்களுடன் ஆதரவோடும் அன்போடும் பழகும் பஸ் கண்டக்டர்களுக்குமட்டுமன்றி பஸ் சாரதிக்கும் தங்கப் பதக்கம் பரிசாக, வழங்க இப்பொழுது ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போவில் கடமையாற்றும் பஸ் கண்டக்டர்களுக்கு தங்கள் சங்கத்தின் சார்பில் "காதன் தங்கப் பதக்கம்"வழங்கப்படுமென அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாண கிழக்கு இ.போ.ச. டிப்போ கவுன்சில் கூட்டத்தில் தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்க தலைவர் திரு. சி. எம். எஸ். நாதன் தெரிவித்தார். யாழ். கிழக்கு டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதிக்கும் "உடையார் தங்கப் பதக்கம்" வழங்கப்படுமென இச்சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

## என் எம். கலந்துகொள்வார்

கொழும்பு, செவ்வாய்

நாவலப்பிட்டியில் இம்மாதம் 19-ம் 20-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும்.தோட்ட தொழிலாளர் யூனியனின் வருடாந்தக் கூட்டத்தில் நிதமந்திரி டாக்டர் என். எம். பெரேரா நிச்சயம் கலந்துகொள்வார் எனத் தெரியவருகிறது.

டாக்டர் என். எம். பெரேரா மகாநாட்டில் கலந்துகொள்ளக்கூடிய விதத்தில் மகாநாட்டை ஒழுங்குசெய்துள்ளதாக, தோட்டத் தொழிலாளர் யூனியன் உபகாரியதரிசி திரு வி. எஸ். ராசா தெரிவித்துள்ளார்.

இம் மகாநாட்டில் தோட்டத் தொழிலாளர்களின் 32 கோரிக்கைகள்பற்றி ஆராயப்படுமெனத் தெரியவருகிறது.

நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா 19-ம் திகதி இலங்கைவந்து சேருவார் என்றும் அன்று நடைபெறும் தோட்டத்தொழிலாளர் மகாநாட்டில் கலந்துகொள்வாரென்று நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது

## சுகாதார அமைச்சுக்கு எம். பி. தந்தி

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துக்கு அதிக தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதை நிவர்த்திசெய்யுமாறு பருத்தித்துறை பாராளுமன்றப் பிரதிநிதி திரு க. துரைரத்தினம் சுகாதார மந்திரியை தந்திமூலம் கேட்டுள்ளார்.

## சுபந்திரியோ

ஜாகர்த்தா, டிச. 8

மலேசியா பிரச்னையில் ஒரு தீர்வை ஏற்படுத்த பரஸ்பர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாய் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறினர் அவர் இப்போது ஐ. நா. கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு நியூயோர்க் சென்றுகொண்டிருக்கிறார். இவ்விஷயமாக ஐ. நாவிலும் முயற்சி மேற்கொள்ளப்போவதாய் அவர் தெரிவித்தார்.

## வில்சன்—ஜோன்சன் 90 நிமிட பேச்சு

வாஷிங்டன், டிச 8

பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனுடன் நேற்று 90 நிமிடம் சம்பாஷணை நடத்தினர். நேட்டோ பலதேச அணுப்படை குறித்தும், மற்றுமுள்ள சர்வதேச பிரச்னைகள் குறித்தும் அவர் பேசினர்

அவர் நிருபர்களிடம் பேசுகையில், மேற்கத்திய தேச கூட்டுறவு பல்வேறு நிர்ப்பந்தங்களுக்குள்ளாகி யிருக்கின்றதென்றும், அதை நீடிக்கமுடியாது என்றும் குறிப்பிட்டார்.

## தாய்லந்தில் மேலும் இருவர் கைது

பாங்காக், டிச, 8

தாய்லந்து அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றதாக நேற்று மேலும் 2 இராணுவ காப்டன்கள் கைதுசெய்யப்பட்டனர். சென்றவாரம் இதுவிஷயமாக 5 இராணுவ அதிகாரிகள் காவலில் வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



கோவில் கும்பாபிஷேகங்களுக்கு தேவையான

# அஷ்டபந்தன மருந்து

★ கோவில்அபிஷேகம், திருவிழாக்கள்
★ திருமண விழாக்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவு சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்

மற்றும்

சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

○ மயில் மார்க் சந்தன வில்லைகள்
○ சுகந்த சந்தனப் பவுடர்
○ பச்சைச் சந்தனம்
(உடன் யந்திரத்தினல் அரைத்தது)

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிரவிய வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 541

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# இராமநாதபுரம் கொலை கடத்தல் வழக்கு விசாரணை

சாவகச்சேரி, செவ்.

2-வது எதிரி என்னுடன் உடலுறவு வைத்துக்கொள்ள முயற்சித்தாரேயன்றி என்னுடன் ஒருமுறையாவது உடலுறவு வைத்துக்கொள்ளவில்லை என்று இராமநாதபுரம் கொலை கடத்தல் வழக்கு இன்றுக்காலை மீண்டும் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரூபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முக்கிய சாட்சியாகிய பூரணம் (வயது 15) வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரத்தினால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது கூறினர்.

### ஜனத்திரள்

விசாரணையை பார்ப்பதற்கு பெண்கள் உட்பட நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர். நீதிமன்றத்தின் வெளியே நின்ற மக்களை ஒழுங்கு செய்வதில் அடிக்கடி பொலிஸார் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

### குற்றச்சாட்டு

இவ்வழக்கில் வட்டக்கச்சியைச் சேர்ந்த வி. தனுஷ்கோடி, கே. நடராசா, கே. குணசிங்கம், வி. சண்முகம், ஜே. ஞானப்பிரகாசம், ஜோ. வரப்பிரகாசம், ஆர். கந்தையா ஆகிய எழுவர் மீது சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் வைரவநாதன் ஆறுமுகம் என்பவருடைய வீட்டிற்குள் நுழைந்து அவரை கொலை செய்ததாகவும், அவரது மகள் பூரணத்தைக் கடத்திச்சென்று கெடுத்ததாகவும் கிளிநொச்சிப்பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

### வழக்கறிஞர்கள்

முதலாம், இரண்டாம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. எம் பாலசுந்தரம், வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினத்தின் உதவியுடனும் திரு ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடனும் ஆஜரானர். மூன்றும் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு வி என். நவரத்தினம், திரு. ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடன் ஆஜரானர். நாலாம், ஐந்தாம், ஆறும் ஏழும் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு கணேசலிங்கம், திரு வி செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானர். வழக்காளி தரப்பில கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. தேவசகாயத்தின் உதவியுடன் திரு. பாலகிருஷ்ணன் வழக்கை நடத்தினர்.

### காயங்கள் ஏற்படவில்லை

கொலையுண்டவரின் மகள் பூரணத்தை வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ— காட்டில் எத்தனைபேர் இருந்தார்கள்? – மூன்று பேர் இருந்தார்கள்

வழ– எத்தனைபேரை அடையாளம் கண்டீர்? இரண்டாம் எதிரியை மட்டும்

வழ– அறையில் இரண்டாம் எதிரியுடன் இழுபறிப்பட்டீர்? – ஆம்

வழ– காயங்கள் ஏற்படவில்லையா? – இல்லை.

வழ– பொலிசாரிடம் 2-ம் எதிரி பல தடவை உம்முடன் உடலுறவு வைத்துக் கொண்டார் எனக் கூறினீரா?–இல்லை

வழ– உம்முடன் ஒருதடவையாவது அவர் உடலுறவு வைக்கவில்லையா? –(மௌனம்)

(விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.)


**ஸ்ரீ மனோகரா**

(யாழ்ப்பாணம்) போன்: 485

4-45 p. m. 7 p. m. and 9-45 p. m.

Cranes are Flying



**ராஜா சினிமா (சுழிபுரம்)**

இப்பொழுது திரையிடப்படுகிறது

சிவாஜி, சாவித்திரி, ஜெமினி முதலியோர் நடித்த

**கப்பலோட்டிய தமிழன்**



**REGAL — JAFFNA**

NOW SHOWING

Audie Murphy-Dan Dureya in

6 BLACK HORSES

(*Eastman Color*)



**2-வது மகத்தான வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (அட்டன்)

தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத பக்தியை மூட்டி, தெய்வத்தின் நிலையடைந்து தமிழர் உள்ளத்தில் வாழும் - பட்டினத்தார்



பிரபல பின்னணிபாடகர்

டி. எம். சௌந்தரராஜன்

எம். ஆர். ராதா

ஜெமினி சந்திரா

எஸ். ராமராவ்

எஸ். டி. சுப்புலக்ஷ்மி

எஸ். ஆர். ஜானகி

நடித்த

**பட்டினத்தார்**

சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன்: கே. சோமு


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் சார்பாக அதனாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாசம் 9-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# அலரிமாளிகையில் நாளை அரசாங்கக்கட்சி கூடுகிறது!

## அடுத்த நடவடிக்கை; விரிவாக ஆராயப்படும்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கம் தோல்வியடைந்த பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி விரிவாக ஆராய்ந்து அடுத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை செய்யும்பொருட்டு அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டமொன்றை அலரிமாளிகையில் நடத்தப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஒழுங்குகள் செய்துள்ளார்.

அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டம் வியாழக்கிழமை நடைபெறும்.

அரசாங்கத்துக்கு ஏற்பட்ட வீழ்ச்சியினுல் எழுந்துள்ள நெருக்கடிகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது. எந்த விதமான நடவடிக்கைகளைக் கட்சி மேற்கொள்ளவேண்டுமென்பது பற்றி இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படுமெனத் தெரியவருகின்றது.

அநேகமாக கட்சியின் பலத்தைக் 'கணக்கிடவே' இக்கூட்டத்தைக் கூட்டியுள்ளாரென்றும், கட்சிமீதும், தம்மீதும் விசுவாசம் வைத்திருக்கும் அங்கத்தவர்களின் கருத்துக்களைப் பிரதமர் இக்கூட்டத்தில் அறிந்துகொள்வாரென்றும் நம்பகமாகத் தெரியவருகின்றது.

பிரதமர் கூட்டும் இக்கூட்டம் முக்கியமவாய்ந்ததாக இருக்குமென்றும், இக்கூட்டத்தில் முக்கியஸ்தர்கள் எல்லோரும் கலந்துகொள்வார்களென்றும் அறியப்படுகின்றது.

## யு என் பி தேர்தல் தவிர்ப்பு ஒப்பந்தம்

கொழும்பு, செவ்வாய்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து பிரிந்துசென்ற திரு சி பி. டி. சில்வா குழுவினருடனும், ஜாதிக விமுக்தி பெரமுனை, மக்கள் ஐக்கிய முன்னணியினருடனும் தேர்தல் ஒப்பந்தம் செய்யுமுகமாகப் பேச்சுவார்த்தை நடத்த ஐக்கியதேசியக்கட்சியின் காரியக்கமிட்டி முடிவுசெய்துள்ளது.

மேற்படி கட்சியினருக்கு 25 தொகுதிகளை விட்டுக்கொடுக்கும் உத்தேசத்துடனேயே இப்பேச்சுவார்த்தை நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. டட்லி சேனநாயக்கா தலைமையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் காரியக்கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது மேற்படி கட்சிகளுடன் யு. என். பி. எதுவித தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாதென திரு பிரேமதாசா கொண்டுவந்த பிரேரணை தோல்வியுற்றது.

தேர்தல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்படும்பட்சத்தில் தமக்கு 50 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென ஜாதிகவிமுக்தி பெரமுனையும், மக்கள் ஐக்கிய முன்னணியும் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## பிரதம நீதியரசரின் எச்சரிக்கை!

கொழும்பு, செவ்வாய்

"பிரதமர் மீண்டும் பதவிக்கு வர தாம் எண்ணுவதாகக் கூறியுள்ளார். ஆனுல் அப்படி அவர் பதவிக்கு வந்தால், மறுமுறையும் எங்கள் பேச்சுச் சுதந்திரத்தையும் மற்றும் சகல சுதந்திரத்தையும் நசுக்குவதற்கு முயற்சி செய்வார் என்பதில் சந்தேகமில்லை" என்று முன்னை நாள் பிரதம நீதியரசர் திரு. எச். எச். பசநாயக்கா புதிய நகரசபை மண்டபத்தில் பத்திரிகைகளை எடுப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

தொடர்ந்து திரு, பசநாயக்கா குறிப்பிட்டதாவது:

கஷ்ட நஷ்டம் இல்லாது எனதிசனிகரிப்பதுதான் எங்கள் கூட்டரசாங்கத் தோழர்களுடைய பல்லவி. அதற்கு ஏற்றாற்போல் தாளம் போடுவதுதான் இலங்கை வானெலியின் நிகழ்ச்சி. ஆகையால் மக்கள் கண்காணிப்புடன் இருந்து எங்கள் சுதந்திரத்தை அழிக்கப்பார்த்தவர்களை இருந்த இடம் தெரியாது அகற்றிவிடுவதே கடமையாகும். எங்கள் மக்களுக்கு உண்ண உணவு, உடுப்பதற்கு உடையில்லாது தவிக்கிறார்கள். எங்கள் வெளிநாட்டு மூலதனம் குறைந்துகொண்டுவருகின்றது. எங்கள் வர்த்தகம் அழிக்கப்பட்டுவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் உச்சவரம்பை அடைந்துவிட்டது. சட்டத்திற்கு மரியாதைகாட்டுவது குறைந்துவிட்டது. ஆகையால் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற தியாகம் செய்வதற்கு தயாராக இருக்கவேண்டும்.

## வேலை நிறுத்தத்துக்கு பிரதமர் ஆதரவில்லை

கொழும்பு, செவ்வாய்

பார்லிமெண்டைக் கலைக்கக்கூடாதென்ற கோரிக்கையை முன்வைத்து நாளை பிற்பகல் அரசாங்கத்தைச் சார்ந்த சகல தொழிற்சங்கங்களும் அலுவலகங்களிலிருந்தும் வெளிநடப்புச் செய்து காலிமுக மைதானத்தில் ஒரு கூட்டம் நடத்துவதெனவும் அடுத்த நாளான வியாழக்கிழமையன்று அடையாள வேலைநிறுத்தம் செய்வதெனவும் கொண்டுள்ள உத்தேசத்துக்குத் தாம் ஆதரவளிக்கவிரும்பவில்லையென பிரதமர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் அவர்களது நோக்கத்தை வரவேற்கும் அதே சமயத்தில் அவர்கள் தமது ஆதரவைத் தெரிவிக்கப் பின்பற்றும் முறையைத் தாம் வரவேற்கவில்லை என பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மரண அறிவித்தல்

**கணபதிப்பிள்ளை வேதநாயகம்**

மலாயன் பென்ஷனியர் திரு கணபதிப்பிள்ளை அன்னத்துரை அவர்களின் அருமை மனைவியார் வேதநாயகம் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னாரது பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக கோம்பயன மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். நீராவியடி முதல் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1197

## பத்திரிகை நிருபர்கள் தாக்கப்பட்டனர்

கொழும்பு, செவ்வாய்

புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பத்திரிகை எதிர்ப்பு கூட்டத்தில் நடைபெற்ற விபரங்களைச் சேகரித்துக்கொண்டு வந்த பத்திரிகைக்காரர்கள், கண்ணூஸ்பத்திரிச் சந்தியில் தாக்கப்பட்டனர். அதே நேரத்தில் அவ்வழியால் சென்றுகொண்டிருந்த பொலிஸார் ஸ்தலத்திற்குச் சென்று 4 பேரைக் கைதுசெய்தனர். கறுவாக்காட்டுப் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்துகின்றனர்.

## குரும்பசிட்டியில் சைவப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், புதன்

குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் வருடாவருடம் நடைபெறுவதுபோல இம்முறையும் சன்மார்க்க சபையின் ஆதரவில் திருவெம்பாவைக்காலத்தில் சைவப்பிரசங்கங்கள் மாலை 6-30 தொடக்கம் 8 மணிவரை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

வருகிற வெள்ளிக்கிழமை இரவு 6-30 மணிக்கு பண்டிதர் சி. வ. சங்கரப்பிள்ளையின் 'வாழ்முதல்' என்ற சொற்பொழிவோடு தொடங்கும் இப்பிரசங்க வரிசையில் பண்டிதைகள் தங்கம்மா அப்பாக்குட்டி, சத்தியதேவி துரைசிங்கம், திருமதிபுவனேஸ்வரி சச்சிதானந்தம், செல்வி புஷ்பாசெல்வநாயகம், சைவப்புலவர் வ. செல்லையா, திரு செ. கதிரேசம்பிள்ளை, ஆத்மஜோதி நா. முத்தையா ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

கூட்டுப்பிரார்த்தனை, தேவார, திருவாசக விருந்து என்பனவும் நடைபெறும்.

## மகாகும்பாபிஷேகம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான பரிவார ஆலயங்களில் ஒன்றாகிய கொட்டடி ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவில் சம்புரோட்ஷண மகாகும்பாபிஷேக விழா 9-12-64 புதன்கிழமை காலை 7 மணியளவில் நடைபெறவிருக்கிறது. இங்ஙனம் ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம். 1198

## தேவை

பாம்பீச் ஹோட்டலுக்கு மனேஜர் ஒருவர் தேவை. பிணை பணம் ரூபா 2'500 செலுத்தப்படவேண்டும் அனுபவம் வாய்ந்திருத்தல் விரும்பத்தக்கது. வேதனம் ரூபா 150 சாப்பாட்டுடன் இருப்பிட வசதியும் அளிக்கப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்: 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1199

## தேவை

பாம்பீச் ஹோட்டலுக்கும், பாம்கோர்ட் ஹோட்டலுக்கும் குக்கப்புகள், வெயிட்டர்கள் தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்: மனேஜர், பாம்கோர்ட், யாழ்ப்பாணம். 1200